**PROCEEDINGS OF THE PUBIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING THE EVIRONMENTAL CLEARANCE FROM THE STATE ENVIRONMENTAL IMPACT ASSESMENT AUTHORITY (SEIAA-TN) FOR PROPOSED MINING PROJECT OF THE UNIT M/S. P.JAGADEESAN ROUGH STONE AND GRAVEL QUARRY IN THE SURVEY NUMBERS:80(P), OVER AN EXTENT OF 4.50.0 HA, KEEZHSEVUR VILLAGE, TINDIVANAM TALUK, VILLUPURAM DISTRICT.**

**Name of the Project:** Proposed to mining project of Rough stone and gravel quarry with an extent of 4.50.0 Hectares by the unit M/s.P.Jagadeesan Rough stone and gravel quarry at S.F.No. 80(P) of Keezhsevur Village, Tindivanam Taluk, Villupuram District.

**Venue:** M/s. Sarvamangala Marriage Hall, near Saraswathi Ammal Charitable Trust, Konerikuppam Village, NH45 Highway, Nallathur Post, Tindivanam Taluk, Viluppuram District – 604 307.

**Date & Time:** 03.09.2026 – 10.00 AM

**Present:**

| | | |
|---|---|---|
| 1. | Thiru.K.Ravi | Special District Revenue Officer (Land Acquisition), National Highways, Villupuram |
| 2. | Er.R.Ranga Raj | District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Villupuram |
| 3. | Er.S.Elayaraja | Assistant Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Villupuram |
| 4. | Er. M.Sangavi | Assistant Engineer, Tamilnadu Pollution Control Board, Villupuram |
| 5. | Thiru.N.Dinesh Babu | Assistant, Tamilnadu Pollution Control Board, Villupuram. |

| | | |
|---|---|---|
| 6. | Thiru.M.Sadagopan | Typist,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |
| 7. | Thiru.P.Jagadeesan | The Proprietor, M/s.P.Jagadeesan Rough stone and gravel quarry at S.F.No. 80(P) of Keezhsevur Village, Tindivanam Taluk, Villupuram District |
| 8. | Thiru.G.Balasubramani | M/s. Global mining Solutions,Salem |
| 9. | Thiru.V.Venkatesh | M/s. Global mining Solutions,Salem |
| 10. | Public and Environmentalists | 76 Persons (List Enclosed) |

The District Environmental Engineer (DEE), Tamil Nadu Pollution Control Board, Villupuram District has welcomed the Special District Revenue Officer (Land Acquisition), National Highways, Villupuram, Government Officials, General Public and NGO's/ Environmentalist for the Public hearing and informed that the unit of M/s.P.Jagadeesan Rough stone and gravel quarry in the Survey Numbers: 80(P), over an extent of 4.50.0 Ha, Keezhsevur Village, Tindivanam Taluk, Villupuram District has proposed to Mining project of Rough stone and gravel quarry. This activity attracts Environmental Impact Assessment Notification 2006, as amended under the category "B1" in the schedule 1(a) of the said notification.

Furthermore, the DEE, TNPCB, Villupuram, has informed that the SEIAA-TN issued the Terms of Reference (ToR) with a public hearing for preparing the Environmental Impact Assessment (EIA) report for the aforementioned activity under the Environmental Impact Assessment Notification, 2006 on 16.02.2026. The project proponent has submitted the draft EIA report to the office of the DEE, TNPCB, Villupuram. A public notice for the public hearing, scheduled on 03.09.2026, was published in *The "New Indian Express"* and "*Daily Thanthi*" on 24.07.2026 with the approval of the District Collector, Villupuram. This public hearing is for the proposed industry of M/s.P.Jagadeesan Rough stone and gravel quarry, and public announcements have been made via loudspeakers and pamphlets distributed in the surrounding villages.

The District Environmental Engineer has informed that the details of the proposed project and the Environmental Impact Assessment (EIA) study conducted by the EIA consultant will be explained through a PowerPoint presentation by the project proponent/EIA consultant. Furthermore, the DEE stated that after the presentation, the public can express their views,

suggestions, and comments on the project, either verbally or in writing, one by one. Additionally, he informed that the opinions and suggestions of the public and environmentalists will be recorded and forwarded to the SEIAA-TN.

The Special District Revenue Officer (Land Acquisition), National Highways, Villupuram requested the project proponent to explain the detail of the project and the EIA study conducted by them to the public in detail.

The representative of project proponent explained the summary of the project and informed that on behalf of the project proponent Thiru.P.Jagadeesan, Proprietor of the M/s. P.Jagadeesan Rough stone and gravel quarry Explained about the project and he welcomed the Special District Revenue Officer (Land Acquisition), National Highways , the District Environmental Engineer, General Public, Environmentalists and other Government Officials and explained the details of the project with help of power point presentation.

The Special District Revenue Officer (Land Acquisition), National Highways, Villupuram has invited the public to present their views, suggestions, or comments regarding the above said proposal/project in a detailed and organized manner. Participants may express their opinions either verbally or in writing. Before presenting, individuals are kindly requested to provide their full name and address for official records.

**1. Thiru. Sivashankar, Keelpootheri**

- He stated that the proposed project would provide employment opportunities to the local people and educated youth in the surrounding villages. He further stated that the project would facilitate road improvement works and contribute to the overall development of the village. Accordingly, he expressed his support for the proposed project.

**2. Thiru. Devaraj, Senthamangalam Village**

- He stated that the proposed project is located at a distance of approximately 5 km from their village. He expressed that the implementation of the project would provide employment opportunities to the people of their village and surrounding villages and ensure a stable source of income for them. He accordingly expressed his support for the proposed project.

**3. Thiru. Balamurugan, Proprietor, M/s. NGP Crusher, Perumukkal Village**

- He stated that the implementation of the proposed project would provide several benefits and would facilitate the implementation of various Government welfare measures in the locality.

- He stated that there are approximately 150 crushers in their village and that each crusher provides employment to around 10 to 15 persons, thereby generating employment opportunities for approximately 25,000 persons..
- He further stated that construction activities and road improvement works are essential for the development of the country and that the proposed quarry would serve as a source of raw materials for such activities. He therefore requested that permission be granted for the proposed project and expressed his support.

**4. Tmt. Jebakani, Association for Rural Development, Villupuram**

- She conveyed her greetings to all those present and stated that the Public Hearing for the proposed stone quarry project was being conducted. She stated that the project would be beneficial for construction activities as well as for the livelihood of the people residing in the surrounding areas.
- She further stated that, although the Government implements various welfare schemes, education and projects of this nature also facilitate the project proponents extending welfare assistance and conducting medical camps in nearby villages.
- She also stated that the project would provide employment opportunities to both educated and uneducated youth in the surrounding areas. She therefore requested that a No Objection Certificate be issued for the proposed project.

**5. Thiru. Ramalingam, Endiyur Village**

- He stated that the implementation of the proposed project would be beneficial for road development works, including the development of four-lane in Tindivanam and six-lane roads in Marakkanam. He further stated that the project would be beneficial to persons like him who own and operate lorries and JCBs. He requested that permission be granted for the proposed project without any objection.

**6. Thiru. Sarathkumar, Driver, EndhoorVillage**

- He stated that the implementation of the proposed project would provide employment opportunities to both educated and uneducated youth in their village. He accordingly expressed his support for the proposed project.

**7. Thiru. Pachamuthu, Housing Board, Tindivanam**

- He stated that approximately 300 families would benefit from the implementation of the proposed project. He accordingly expressed his support for the proposed project.

**8. Thiru. Lokesh, Keezh Arungunam Village**

- He stated that youths from their village, including himself, are compelled to travel to other places in search of employment. However, due to the lack of a suitable working environment, they often return to their village.
- He stated that the implementation of such a project in their village would provide employment opportunities to approximately 30 youths. He further stated that a hotel/canteen facility for the workers would also generate employment opportunities for local women. He accordingly expressed his support for the proposed project.

**9. Thiru. T. Shanmugam, Keezh Arungunam Village**

- He requested the Project Proponent to implement the proposed project without causing any adverse impact on agricultural activities and livestock in the surrounding area. He accordingly expressed his support for the proposed project.

**10. Thiru. Karthik, Villupuram**

- He conveyed his greetings to all those present at the Public Hearing. He stated that the project proponent has been extending various welfare assistance to the people of the surrounding villages. He therefore requested that permission be granted for the proposed project and expressed his support.

**11. Tmt. Lilly, Keezh Arungunam Village**

- She stated that she belongs to Keezh Arungunam Village. She stated that the implementation of the proposed project would provide employment opportunities to women in the village, particularly through cooking and catering services for the workers.
- She further stated that the local people are presently compelled to travel to other places in search of employment and that employment opportunities within their own village would be highly beneficial.
- She also stated that, in the present era of computerisation, the proposed project would be beneficial to persons who are uneducated, like herself. She therefore requested that permission be granted for the proposed project and expressed her support.

**12. Tmt. Ellammal, President, Keezhsevoor Village Panchayat**

- She stated that the village is facing a shortage of drinking water and that the residents have been submitting representations regarding the issue. She further stated that the existing village lake is not conducive to adequate water storage and requested that necessary measures be taken for the repair and strengthening of the lake bund to improve its water-holding capacity.

13. **Thiru. Dhanasekar, Keezhsevoor Village**
   - He stated that the previous speaker was the President of their Village Panchayat. He further stated that, despite the availability of three drinking water wells in their village, there is a severe scarcity of drinking water. He attributed the water shortage to the operation of stone quarries in the area.
   - He requested that the licence of the existing quarry, which has been in operation for the past five years, be cancelled and that permission/licence should not be granted for the proposed quarry. He stated that the village is already facing severe drinking water problems due to the presence of two existing stone quarries.
   - He further stated that, if permission is granted for another stone quarry under such circumstances, the villagers would be mobilised to conduct a large-scale protest.
14. **Thiru. Rajini, Keezhsevoor Village**
   - He stated that most of the people in their village travel to other places in search of employment, while members of his family have traditionally been engaged in agricultural activities. He stated that, in the nearby villages, raw materials were previously extracted by cutting the hills, whereas excavation of the earth is presently being carried out.
   - He further stated that, to his knowledge, there had been no drinking water scarcity in their village during his 40 years of age; however, the village has been facing a drinking water shortage for the past six months. He attributed the present situation to the stone quarries in the area.
   - He stated that the adverse impacts of quarrying were not immediately apparent when quarries were established in nearby villages. However, since there are already two quarries in their village, he questioned where the villagers would go if permission were granted for another quarry. He requested that Government employment opportunities be provided to the local people first and that a decision regarding permission for additional quarries be taken thereafter.
15. **Thiru. Thambiraj, Vice-President, Keezhsevoor Village**
   - He stated that a resolution had already been passed seeking closure of the existing stone quarry, whereas permission has now been sought for establishing a new stone quarry. He further stated that the proposed quarry is located at a distance of only about 500 metres from residential houses, whereas the Draft Environmental Impact Assessment Report mentions that the distance is more than 800 metres.

- He therefore requested that the distance be verified and the matter be thoroughly examined and that appropriate action be taken to prevent the establishment of the proposed quarry.

In response, the **District Environmental Engineer, Villupuram**, requested the Project Consultant/Project Proponent to provide clarification regarding the points raised by Thiru. Thambiraj.

- Subsequently, the **Project Consultant** stated that, as per the applicable environmental/mineral regulations, residential houses should not be located within a radius of 300 metres and that the residential houses are located at a distance of about 800 metres from the proposed quarry.

During the proceedings, due to the commotion among the participants, the **District Environmental Engineer, Villupuram**, requested everyone to remain seated and to record their views in an orderly manner.

- Thereafter, Thiru. Thambiraj, Vice-President, Keezhsevoor Village, stated that if persons from the neighbouring villages expressed their support for the proposed project, they should also extend such support if a similar project were proposed in their own village. He stated that the proposed project may cause adverse impacts to their village. He further stated that water does not remain stored in the existing village lake and requested that the measurements/details mentioned in the Draft Environmental Impact Assessment Report be verified.

**16. Thiru. Shanmugam, Keezhsevoor Village**

- He stated that residential houses are located at a distance of approximately 20 metres from the existing quarry in their village. He further stated that two drinking water wells are located at a distance of about 50 metres from the proposed quarry site. However, he stated that he was not aware in whose presence the measurements mentioned in the Draft Environmental Impact Assessment Report had been carried out.
- He further stated that persons from the neighbouring villages had indicated that the proposed project would provide employment opportunities to the local people. However, he stated that even at the M/s.Thulasi Crusher located in the neighbouring village, persons from other States are employed. He stated that local people are not receiving employment opportunities in projects located in their own area.

- He therefore requested that the matter be re-examined and appropriate action be taken so that the people of their village are not forced into a situation where they have to purchase drinking water.

**Further submissions by Thiru. Rajini, Keezhsevoor Village**

- Thereafter, Thiru. Rajini, Keezhsevoor Village, reiterated that there had been no drinking water shortage in their village for nearly 37 years, even when only one well was available. However, at present, despite the availability of three wells, drinking water is not available. He stated that, due to the shortage of water, agricultural activities could not be carried out.
- He further stated that most of the persons who attended the Public Hearing were from neighbouring villages. He requested that suitable solutions be provided for the basic needs of the local people, particularly agriculture and drinking water, before taking a decision regarding granting permission for the proposed project.

**Further submissions by Thiru. Dhanasekar, Keezhsevoor Village**

- Thereafter, Thiru. Dhanasekar, Keezhsevoor Village, reiterated that the purpose of recording their views in the Public Hearing was that the proposed project may cause adverse impacts to their village. He stated that, if permission is granted despite their objections, the villagers are prepared to undertake further protest.

In response, the **District Environmental Engineer, Villupuram**, stated that all the views and representations recorded by the members of the public during the Public Hearing would be documented in audio-visual form and forwarded to the **State Environment Impact Assessment Authority (SEIAA)** for consideration.

When Thiru. Dhanasekar, Keezhsevoor Village, sought clarification as to whether the Public Hearing was restricted only to the residents of their village, the **District Environmental Engineer, Villupuram**, clarified that the Public Hearing was open to any person residing in the village where the project is proposed as well as the surrounding villages and that it was a general Public Hearing open to all.

Finally, the **District Environmental Engineer, Villupuram**, stated that a total of **16 persons** had expressed their views regarding the proposed project. Of these, **12 persons expressed support**, while **4 persons expressed opposition** to the project.

He further stated that the views, suggestions and representations received from the public would be compiled and recorded through videography and forwarded to the **State Environment**

**Impact Assessment Authority (SEIAA)** for consideration. The written representations received from the public would also be enclosed and forwarded along with the recorded proceedings.

**The following 40 members of the public have expressed their opinion in writing are as:**

<table>
<tr><td>1.</td><td>Thiru. R. Karthi, Bharathiya Nagariga Seva Sangam, Regn. No. 301/2009, No. 6/13, Nappalayam Lane, Villupuram – 605602.</td><td rowspan="11">They have submitted their views in writing regarding the proposed project.</td></tr>
<tr><td>2.</td><td>Thiru. V. Suresh, Vice President, Pasumai Virutcham Seva Sangam, Regn. No. 23/2026, Villupuram – 605602.</td></tr>
<tr><td>3.</td><td>Thiru. V. Manikandan, Treasurer, Pasumai Virutcham Seva Sangam, Regn. No. 23/2026, Villupuram – 605602.</td></tr>
<tr><td>4.</td><td>Thiru. K. Srinivasan, President, Pasumai Virutcham Seva Sangam, Regn. No. 23/2026, Villupuram – 605602.</td></tr>
<tr><td>5.</td><td>Thiru. M. Sivanathan, Secretary, Pasumai Virutcham Seva Sangam, Regn. No. 23/2026, Villupuram – 605602.</td></tr>
<tr><td>6.</td><td>Tmt. A. Kamatchi, No. 64, Appasamy Nagar, Tindivanam – 604001.</td></tr>
<tr><td>7.</td><td>Thiru. P. Lokesh, Keezh-Arungunam Village, Villupuram District.</td></tr>
<tr><td>8.</td><td>Thiru. P. Kapilan, Keezh-Arungunam Village, Villupuram District.</td></tr>
<tr><td>9.</td><td>Tmt. K. Pachaiyammal, Keezh-Arungunam Village, Villupuram District.</td></tr>
<tr><td>10.</td><td>Tmt. P. Lilly, Keezh-Arungunam Village, Villupuram District.</td></tr>
<tr><td>11.</td><td>Tmt. V. Subha, Keezh-Arungunam Village, Villupuram District.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 12. | Tmt. P. Nithya, Keezh-Arungunam Village, Villupuram District. | They have submitted their views in writing regarding the proposed project. |
| 13. | Tmt. Irusammal, Keezh-Arungunam Village, Villupuram District. | |
| 14. | Thiru. K. Karunamoorthy, Endhoor Village, Villupuram District. | |
| 15. | Thiru. P. Venkatesan, Tindivanam. | |
| 16. | Thiru. E. Praveen, Endhoor Village, Villupuram District. | |
| 17. | Thiru. V. Gopalakrishnan, Rayanallur Village, Villupuram District. | |
| 18. | Thiru. Vignesh, Keezh-Arungunam Village, Villupuram District. | |
| 19. | Thiru. N. Kumar, Keezh-Pootheri Village, Villupuram District. | |
| 20. | Thiru. J. R. Parandhaman, Keezh-Arungunam Village, Villupuram District. | |
| 21. | Thiru. S. Ashok, Endhoor Village, Villupuram District. | |
| 22. | Thiru. A. Sivasankar, Keezh-Pootheri Village, Villupuram District. | |
| 23. | Thiru. K. Prabhu, Keezh-Arungunam Village, Villupuram District. | |
| 24. | Thiru. M. Manikandan, Keezh-Arungunam Village, Villupuram District. | |
| 25. | Thiru. G. Sarathkumar, Endhoor Village, Villupuram District. | |
| 26. | Thiru. Velmurugan, Keezh-Arungunam Village, Villupuram District. | |
| 27. | Thiru. Shanmugam, Arungunam Village, Villupuram District. | |

| | | |
|---|---|---|
| 28. | Thiru. K. Sarath, Tindivanam, Villupuram District. | They have submitted their views in writing regarding the proposed project. |
| 29. | Thiru. K. Arun, Keezh-Arungunam Village, Villupuram District. | |
| 30. | Thiru. Mani, Senalur Village, Villupuram District. | |
| 31. | Thiru. Satheesh, Keezh-Arungunam Village, Villupuram District. | |
| 32. | Thiru. Prasad, Senalur Village, Villupuram District. | |
| 33. | Thiru. Hari, Keezh-Arungunam Village, Villupuram | |
| 34. | Thiru. Akash, Maanur Village, Villupuram District. | |
| 35. | Thiru. Karnakaran, Keezh-Arungunam Village, Villupuram District. | |
| 36. | Thiru. Vijay, Keezh-Arungunam Village, Villupuram District. | |
| 37. | Thiru. Arumugam, Kattalai Village, Villupuram District. | |
| 38. | Thiru. P. Prasad, Senalur Village, Villupuram District. | |
| 39. | Thiru. E. Subash, Nallalam Village, Villupuram District. | |
| 40. | Thiru. Paramasivam, Vittalapuram Village, Villupuram District. | |

**Thereafter no views/comments were raised.**

**The District Environmental Engineer, TNPCB, Villupuram.**

Furthermore, the DEE, TNPCB, Villupuram has informed that as per the public notice in the newspaper for this project the proceeding of the public hearing will be made displayed at the District Collectorate Office - Villupuram, Olakur Panchayat Union office, Tindivanam Taluk office, Keezhsevur Village Panchayat Office and Office of the District Environmental Engineer, TNPCB, Vilupuram, and also in the TNPCB website of www.tnpcb.gov.in after the said public hearing. Commands, if any, on the proceeding may be sent directly to the regulatory authorities (Member Secretary, State Environmental Impact Assessment Authority –TamilNadu / MoEF&CC) and the applicant concerned.

**District Environmental Engineer,**
**Tamilnadu Pollution Control Board,**
**Villupuram**

**Special District Revenue Officer (Land Acquisition), National Highways,**
**Villupuram.**

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily Newspaper Tamil & English dated 24.07.2026 for notifying the public hearing meeting.
2. Attendance sheet at the public hearing (Total pages 10 & 76 Persons).
3. Audio & Video stored in the Pen drive of the public hearing proceedings.
4. Photographs of the public hearing proceedings.
5. Soft and Hard copies of EIA Report, Executive Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. Petitions received from the public / NGO / Environmentalist through E-mail, Postal and in the public hearing meeting – 40 Nos.

**விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், கீழ்சேவூர் கிராமம், சர்வே. எண் 80(P) ல் 4.50.0 ஹெக்டேர் பரப்பளவில் தி/ள். ஜெகதீசன் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி உத்தேசிக்கப்படுவது குறித்து மாநில அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறுதல் தொடர்பாக 03.09.2026 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விபரங்கள்**

**திட்டத்தின் பெயர்:** விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், கீழ்சேவூர் கிராமம், சர்வே. எண் 80(P) ல் 4.50.0 ஹெக்டேர் பரப்பளவில் தி/ள். ஜெகதீசகன் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவப்படவுள்ளது.

**இடம்:** தி/ள். சர்வமங்களா திருமண கூடம்,
சரஸ்வதி அம்மாள் அறக்கட்டளை அருகில்
கோனேரிக்குப்பம் கிராமம், NH45 ஹைவே,
நல்லாத்தூர் அஞ்சல், திண்டிவனம் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம் – 604 307.

**நாள் மற்றும் நேரம் :** 03/09/2026 - காலை 10.00 மணி

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | திரு. க. இரவி | தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி. அ),<br>தேசிய நெடுஞ்சாலை, விழுப்புரம். |
| 2. | பொறி. இரா. இரங்க ராஜ் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 3. | திரு. S. இளையராஜா, | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |

| | | |
|---|---|---|
| 4. | திருமதி. மு. சங்கவி | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 5. | திரு. நா. தினேஷ் பாபு | உதவியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 6. | திரு. ம. சடகோபன் | தட்டச்சர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 7. | திரு. P. ஜெகதீசன் | உரிமையாளர்,<br>தி/ள் P. ஜெகதீசன் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி, கீழ்சேவூர் கிராமம். |
| 8. | திரு. G. பாலசுப்ரமணி | தி/ள் குளோபல் மைனிங் சொலுஷன்ஸ், சேலம். |
| 9. | திரு. V. வெங்கடேஷ் | தி/ள் குளோபல் மைனிங் சொலுஷன்ஸ், சேலம். |
| 10. | பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (76 நபர்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் அவர்கள் சுற்றுச்சூழல் அனுமதிபெறும் பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் மதிப்பிற்குரிய தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.அ) தேசிய நெடுஞ்சாலை, விழுப்புரம் அவர்களையும், பங்கேற்கவந்துள்ள பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரையும் வரவேற்று விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், கீழ்சேவூர் கிராமம், தி/ள் P. ஜெகதீசன் சாதாரண் கல் மற்றும் கிராவல் குவாரி, சர்வே. எண் 80(P) ல் 4.50.0 ஹெக்டேர் பரப்பளவில் நிறுவப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து கீழ்க்கண்ட விபரங்களையும் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006ன்படி வகை B1 மற்றும் அட்டவணை 1(a) இன் கீழ் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தின் செயல்பாட்டிற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தி தயாரிப்பதற்கான குறிப்பு விதிமுறைகளை Terms of Reference (TOR) 16.02.2026 அன்று வழங்கியுள்ளது.

மேலும், நிறுவனம் வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இப்பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடைபெறவிருக்கிறது.

இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி, தி/ள் P. ஜெகதீசன் சாதாரண் கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்திற்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டமானது விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், கோணேரிக்குப்பம் கிராமம், தி/ள் சரஸ்வதி அம்மாள் அறக்கட்டளை அருகில் அமைந்துள்ள தி/ள். சர்வமங்களா திருமண கூடத்தில் 03.09.2026 அன்று முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும் என்று "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" மற்றும் "தினத்தந்தி" ஆங்கில மற்றும் தமிழ் நாளேடுகளில் 24.07.2026 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும் அப்பகுதியிலுள்ள மக்களுக்கு இத்தகவல் ஒலிபெருக்கி மற்றும் துண்டுப்பிரசுரம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர், இக்கூட்டத்தில் தி/ள் P. ஜெகதீசன் சாதாரண் கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் EIA Consultant, திரு. G. பாலசுப்ரமணி, தி/ள் குளோபல் மைனிங் சொலுஷன்ஸ், சேலம் அவர்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை விரிவாக எடுத்துரைப்பார்கள் என்று கூறினார். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். தங்களுடைய கருத்துக்கள் முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார்.

தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.அ), தேசிய நெடுஞ்சாலை, விழுப்புரம் அவர்கள் இத்திட்டத்தின் விவரம் மற்றும் திட்டத்தின் நிர்வாகத்தினரால் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை தொடர்பான விவரங்களையும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார் .

திரு. G. பாலசுப்ரமணி (EIA Consultant), தி/ள் குளோபல் மைனிங் சொலுஷன்ஸ், சேலம் அவர்கள் தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.அ), தேசிய நெடுஞ்சாலை, விழுப்புரம் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும் வரவேற்று நிழற்பட விளக்க காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

அதன்பின்னர் தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.அ), தேசிய நெடுஞ்சாலை, விழுப்புரம் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துகள் பதிவு செய்யும் முன் பொதுமக்கள் தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

**1. திரு. திரு. சிவசங்கர், கீழ்பூதேரி,**

- இவர் கூறுகையில், இந்த திட்டம் அமைவதனால் சுற்றியுள்ள ஊரில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். மேலும், கிராமத்திற்கு சாலை மேம்பாட்டு பணிகள் அமைத்தல் மற்றும் கிராமத்தின் வளர்ச்சிக்கு மற்றும் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்க இத்திட்டம் உதவியாக இருக்கும் என கூறி தனது ஆரதவை தெரிவித்தார்.

**2. திரு. தேவராஜ், சேந்தமங்கலம் கிராமம்**

- இவர் கூறுகையில், இந்த திட்டம் எங்கள் ஊரில் இருந்து சுமார் 5 கிலோமீட்டர் தொலைவில் அமைய உள்ளது. இத்திட்டம் அமைவதனால் எங்கள் கிராமத்தில் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களுக்கு உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் அவர்களுக்கு நிலையான வருமானம் கிடைக்கும் என கூறி தனது ஆரதவை தெரிவித்தார்.

**3. திரு. பாலமுருகன், தி/ள் NGP கிரஷர் உரிமையாளர், பெருமுக்கல் கிராமம்**

- இவர் கூறுகையில், இந்த திட்டம் அமைவதனால் பல்வேறு நன்மைகள் உள்ளதாகவும், நேரடியாக அரசின் நலத்திட்ட உதவிகள் செயல்படுத்துவதற்கு இத்திட்டம் உதவியாக இருக்கும் என்று கூறினார். எங்கள் ஊரில் சுமார் ஒரு 150 கிரஷர்கள் உள்ளது அதில் ஒவ்வொரு கிரஷரிலும் 10 முதல் 15 நபர்கள் பணிபுரிகின்றனர்கள். இதன் மூலம் சுமார் 25000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என கூறினார். நமது நாடு ஒரு வளர்ச்சிப்பாதையில் செல்ல கட்டுமானப்பணிகள் மற்றும் சாலை மேம்பாட்டு பணிகள் மிக அவசியம் என்பதனாலும் அதற்கு மூல ஆதாரமாக விளங்குவது இந்த குவாரி என்பதனாலும் இத்திட்டத்திற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டு தனது ஆரதவை தெரிவித்தார்.

**4. திருமதி. ஜெபக்கனி, அசோசியேஷன் பார் ரூரல் டெவலப்மெண்ட், விழுப்புரம்,**

- இவர் கூறுகையில், அனைவருக்கும் தனது வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு, இந்த கல் குவாரிக்கான கருத்துக் கேட்பு கூட்டம் இன்று நடைபெறுகிறது. இந்த திட்டம் கட்டுமானப் பணிகளுக்கும் அங்கு வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்திற்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அரசு பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்தாலும், இது போன்ற திட்டங்களினால் அதன் உரிமையாளர்கள் அருகில் உள்ள கிராமங்களுக்கு சில நலத்திட்ட உதவிகள், கல்வி மற்றும் மருத்துவ முகாம்கள் செய்து கொடுக்கிறார்கள். மேலும், அருகில் உள்ள படித்த, படிக்காத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பும் இத்திட்டத்தினால் கிடைக்கும் என்பதனால் இத்திட்டத்தில் தடையின்மை சான்று வழங்குமாறு குறிப்பிட்டார்.

**5. திரு. ராமலிங்கம், எண்டியூர்கிராமம்,**

- இவர் கூறுகையில், இந்த திட்டம் அமைவதனால் திண்டிவனத்தில் வரும் ஆறு வழிச்சாலை மற்றும் மரக்காணத்தில் வரும் நான்கு வழிச்சாலை போன்ற சாலை மேம்பாட்டு பணிகளுக்கும், லாரி, ஜே.சி.பி க்கள் வைத்திருக்கும் என்னைப் போன்றவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என கூறி எவ்வித ஆட்சேபனையும் இன்றி அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

**6. திரு. சரத்குமார், ஓட்டுநர், ஏந்தூர் கிராமம்,**

- இவர் கூறுகையில், இந்த திட்டத்தினால் எங்கள் ஊரில் உள்ள படித்த படிக்காத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என கூறி தனது ஆதரவினை தெரிவித்தார்.

**7. திரு . பச்சமுத்து, ஹவுசிங் போர்டு, திண்டிவனம்**

- இவர் கூறுகையில், இந்த திட்டத்தினால் சுமார் 300 குடும்பங்கள் பயனடையும் என்று கூறி தனது அதரவினை தெரிவித்தார்.

**8. திரு .லோகேஷ், கீழ் அருங்குணம் கிராமம்,**

- இவர் கூறுகையில், எங்கள் ஊரில் உள்ள என்னைப் போன்ற இளைஞர்கள் வேலை தேடி வெளியூர் செல்கின்றனர்கள். அங்கு அவர்களுக்கு உகந்த சூழல் இல்லாத காரணத்தால் திரும்ப வந்து விடுகின்றனர். இது போன்ற திட்டம் எங்கள் ஊரில் அமைவதனால் சுமார் ஒரு 30 இளைஞர்கள் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

அங்கு பணி புரிபவர்களுக்கு ஒரு ஹோட்டல் அமையும் அதன் மூலம் அங்கு உள்ள மகளிருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று கூறி தனது அதரவினை தெரிவித்தார்.

**9. திரு . T. சண்முகம், கீழ் அருங்குணம் கிராமம்,**

- இவர் கூறுகையில், திட்டத்தின் உரிமையாளர், விவசாயத்திற்கும் கால்நடைகளுக்கும் எவ்வித பாதிப்பும் இன்றி திட்டத்தை அமைக்குமாறு கேட்டுக் கொண்டு தனது அதரவினை தெரிவித்தார்.

**10. திரு . திரு. கார்த்திக், விழுப்புரம்,**

- இவர் கூறுகையில், இந்த கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்து அனைவருக்கும் தனது வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு, இந்த நிறுவனமானது அருகில் உள்ள கிராம மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்து வருவதனால் இத்திட்டத்திற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டு தனது அதரவினை தெரிவித்தார்.

**11. திரு மதி. லில்லி, கீழ் அருங்குணம் கிராமம்,**

- இவர் கூறுகையில், தான் கீழ் அருங்குணம் கிராமத்தை சேர்ந்தவர் என்ற கூறினார். இந்த திட்டம் அமைவதனால் எங்கள் ஊரில் உள்ள பெண்களுக்கு அங்கு வேலை புரிபவர்களுக்கு சமைத்து தரும் வேலை வாய்ப்பு கிடைக்கும். நாங்கள் வெளியூர்களுக்கு வேலை தேடி செல்லும் நிலை உள்ளது. எங்களுக்கு சொந்த ஊரிலே வேலை கிடைத்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். கம்யூட்டர் மயமாக்கப்பட்ட காலக்கட்டத்தில் என்னைப்போன்ற படிக்காதவர்களுக்கு இத்திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என கூறி இத்திட்டத்திற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டு தனது அதரவினை தெரிவித்தார்.

**12. திருமதி. எல்லம்மாள், கீழ்சேவூர் ஊராட்சி மன்றத்தலைவர்,**

- இவர் கூறுகையில், எங்கள் ஊரில் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகிறது. எங்கள் ஊரில் நிலவும் குடிநீர் தட்டுப்பாடு காரணமாக மக்கள் என்னிடம் கோரிக்கை வைக்கின்றர்கள். மேலும், எங்கள் ஊரில் உள்ள ஏரி நீர் தேங்கி நிற்பதற்கு ஏதுவாக இல்லை, ஏரிக்கரையை சரி செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**13. திரு. தனசேகர், கீழ்சேவூர் கிராமம்,**

- இவர் கூறுகையில், இதற்கு முன் பேசியவர் எங்கள் ஊராட்சி மன்றத் தலைவர் என குறிப்பிட்டு, எங்கள் ஊரில் ஒன்றல்ல இரண்டல்ல மூன்று குடிநீர் கிணறுகள்

இருந்தும் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகிறது. இதற்கெல்லாம் காரணம் கல்குவாரி தான் என்று கூறினார். ஏற்கனவே ஐந்து ஆண்டு காலமாக உள்ள குவாரி உரிமத்தை ரத்து செய்தும், தற்போது அனுமதி வழங்க உள்ள குவாரிக்கு உரிமம் வழங்க வேண்டாம் என்றும் ஊர் மக்கள் சார்பாக கேட்டுக் கொள்வதாக கூறினார். எங்கள் ஊரில் ஏற்கனவே இரண்டு கல்குவாரிகளினால் எங்கள் ஊர் மிகவும் மோசமான குடிநீர் தட்டுப்பாடு நிலைகள் உள்ளது. இத்தகைய சூழ்நிலையில் இன்னொரு கல்குவாரிக்கு அனுமதி வழங்கினால் பொதுமக்களை ஒன்று திரட்டி மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்துவோம் என்று கூறினார்.

**<u>14. திரு. ரஜினி, கீழ்சேவூர் கிராமம்,</u>**

- இவர் கூறுகையில், எங்கள் ஊரில் உள்ளவர்கள் பெரும்பாலும் வேலை தேடி வெளியூர்களுக்கு தான் செல்வார்கள். ஆனால் எனது வீட்டில் உள்ள மூதாதையர்கள் விவசாயம் செய்து வருகிறார்கள். அருகில் உள்ள கிராமங்களில் இதற்கு முன் மலையை வெட்டித்தான் மூலப்பொருட்கள் எடுத்தார்கள். ஆனால் தற்போது பூமியை தோண்டி எடுக்கின்றனர்கள். எனது 40 வயது ஆகிறது எனக்கு தெரிந்து எங்கள் ஊரில் குடிநீர் தட்டுப்பாடு வந்தது இல்லை. கடந்த ஆறு மாத காலமாக எங்கள் ஊரில் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகிறது. இதற்கு காரணம் கல்குவாரிகள் தான் என்று கூறினார். அருகில் உள்ள கிராமங்களுக்கு குவாரி வந்த போது அதன் பாதிப்பு தெரியவில்லை. தற்போது எங்கள் ஊரில் ஏற்கனவே இரண்டு குவாரிகள் உள்ள நிலையில் இன்னொரு குவாரிக்கு அனுமதி வழங்கினால் நாங்கள் இந்த ஊரை விட்டு எங்கு செல்வது என்ற கேட்டார். எங்கள் ஊரில் உள்ள கிராம மக்களுக்கு அரசாங்க வேலை கொடுத்து விட்டு எத்தனை குவாரிகளுக்கு வேண்டுமானாலும் அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

**<u>15. திரு. தம்பிராஜ், துணைத்தலைவர், கீழ்சேவூர் கிராமம்,</u>**

- இவர் கூறுகையில், ஏற்கனவே உள்ள கல்குவாரியையே மூடுதல் உத்தரவு பிறப்பிக்க தீர்மானம் நிறைவேற்றி உள்ள நிலையில், புதிய கல் குவாரிக்கு அனுமதி கோரி உள்ளனர். புதிய அமைய உள்ள கல் குவாரிக்கு வீடுகளுக்கும் 500 மீட்டர் மட்டுமே இடைவெளி உள்ளது ஆனால் 800 மீட்டர் மேல் உள்ள என வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இதனை ஆய்வு செய்து இதனை தடுப்பது நல்லது என கேட்டுக் கொண்டார்.

இதற்கு **மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விழுப்புரம் அவர்கள்** திட்ட ஆலோசகர் / திட்ட உரிமையாளரை திரு. தம்பிராஜ் அவர்களின் கருத்துக்களுக்கு விளக்கம் அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

- அதனை தொடர்ந்து, திட்ட ஆலோசகர், அவர்கள் தமிழ்நாடு சுற்றுச்சூழல் கனிம விதிகளின் கீழ் 300 மீட்டர் சுற்றளவில் தான் வீடுகள் இருக்க கூடாது ஆனால் 800 மீட்டர் சுற்றளவில் வீடுகள் உள்ளது என்று கூறினார்.

இதற்கிடையில் ஏற்பட்ட சலசலப்பினால், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விழுப்புரம் அவர்கள் அனைவரும் அவர்அவர்கள் இருக்கையில் அமர்ந்து கருத்துக்களை பதிவு செய்யுமாறு கேடுக் கொண்டார்.

திரு. தம்பிராஜ், துணைத்தலைவர், கீழ்சேவூர் கிராமம் அவர்கள் இங்கு உள்ள பக்கத்து கிராமத்தில் வசிப்பவர்கள் ஆரதவு தெரிவித்தால் அவர்கள் ஊரில் அமைக்கும் போது ஆதரவு தெரிவிக்குமாறும், இதனால் எங்கள் ஊரில் பாதிப்பு நிலவும் என்று கூறினார். ஏற்கனவே எங்கள் ஊரில் உள்ள ஏரியில் தண்ணீர் தேங்கி நிற்பதில்லை என்றும், வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் உள்ள அளவீடுகளை சரிபார்க்குமாறு கேட்டுக் கொண்டார்.

**16. திரு. சண்முகம், கீழ்சேவூர் கிராமம்,**

- இவர் கூறுகையில், ஏற்கனவே எங்கள் ஊரில் உள்ள குவாரிக்கு 20 மீட்டர் தொலைவில் வீடுகள் உள்ளது. தற்போது அமைய உள்ள குவாரியில் இருந்து 50 மீட்டர் தொலைவில் இரண்டு குடிநீர் கிணறுகள் உள்ளது. ஆனால் வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை யார் முன்னிலையில் அளவீடு செய்யப்பட்டது என எனக்கு தெரியவில்லை என்று கூறினார். ஏற்கனவே பக்கத்து கிராமத்தில் உள்ளவர்கள் கூறுகையில் எங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவித்து உள்ளனர். ஆனால் அவர்கள் ஊரில் உள்ள துளசி கிரஷரில் கூட வட மாநிலத்தவரே பணி செய்கின்றனர்கள். எங்கள் ஊரில் உள்ள திட்டங்களிலே எங்கள் ஊரில் உள்ளவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. எங்கள் ஊரில் உள்ள மக்கள் குடிநீரை விலை கொடுத்து வாங்கும் சூழலுக்கு தள்ளப்படாமல் இருக்க மறு ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அதனை தொடர்ந்து திரு. ரஜினி, கீழ்சேவூர் கிராமம் அவர்கள் மீண்டும் எங்கள் ஊரில் ஒரு கிணறு இருந்த போது கூட குடிநீர் தட்டுப்பாடு 37 ஆண்டு காலமாக இல்லை. ஆனால்

தற்போது 3 கிணறுகள் இருந்தும் குடிநீர் இல்லை. இதனால் நாங்கள் விவசயாம் செய்ய இயலவில்லை. மேலும், இங்கு வருகைபுரிந்தவர்கள் பெரும்பாலானோர், பக்கத்து கிராமத்தை சேர்ந்தவர்கள் என்று கூறி, எங்களிடம் அடிப்படையில் தேவைகளான விவசாயம் மற்றும் குடிநீர் ஆகியவற்றிற்கு ஒரு வழி கூறிவிட்டு, அனுமதி வழங்குவது குறித்து முடிவு எடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அதனை தொடர்ந்து திரு. தனசேகர், கீழ்சேவூர் கிராமம் அவர்கள் மீண்டும் நாங்கள் இந்த கருத்துக் கேட்புக் கூட்டத்தில் எங்கள் கருத்துக்களை பதிவு செய்வதன் காரணம், இதனால் எங்களுக்கு பாதிப்பு நிலவும் என்பதற்காகவே தான். அதனையும் மீறி அனுமதி வழங்கினால் நாங்கள் போராட தயாராக உள்ளோம் என்று கூறினார்.

இதற்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விழுப்புரம் அவர்கள் இந்த கருத்துக் கேட்பு கூட்டத்தில் பொதுமக்களால் பதிவு செய்யப்பட்ட கருத்துக்கள் அனைத்தும் ஒளி ஒலி வடிவில் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்று கூறினார். மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விழுப்புரம் அவர்களை திரு. திரு.தனசேகர், கீழ்சேவூர் கிராமம் அவர்கள் இந்த கருத்துக் கேட்பு கூட்டத்தில் எங்கள் கிராம மக்களுக்கு மட்டுமா என்று கேட்டதற்கு திட்ட அமைய உள்ள ஊர் மற்றும் அதனை சுற்றி உள்ள கிராமங்களில் வசிக்கும் யார் வேண்டுமானாலும் பங்கேற்கலாம் என்றும் அனைவருக்கும் பொதுவான கருத்துக் கேட்பு கூட்டம் என்று கூறினார்.

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விழுப்புரம் அவர்கள் இந்த திட்டம் தொடர்பாக 16 நபர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்து உள்ளனர் என்று கூறினார். அதில் 12 நபர்கள் ஆதரவாகவும் 4 நபர்கள் எதிராகவும் கூறி உள்ளனர்கள் என்றும் கூறினார். மேலும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விழுப்புரம் அவர்கள் இப்பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகள் ஆகியவை தொகுத்து, வீடியோ கிராஃபி மூலம் பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என்றும் தெரிவித்தர். பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட எழுத்துப்பூர்வ கருத்துக்களையும் இதனுடன் சேர்த்து அனுப்பப்படும் என்று குறிப்பிட்டார்.

**கீழ்க்கண்ட நாற்பது பொதுமக்கள் தங்கள் கருத்தை எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்துள்ளனர்.**

| வ.எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 1. | திரு. ஆர். கார்த்தி,<br>பாரதிய நாகரீக சேவா சங்கம்,<br>பதிவு எண். 301/2009<br>எண். 6/13 நாப்பாளைய சந்து,<br>விழுப்புரம்- 605602. | இவர்கள் இத்திட்டத்திற்கு எழுத்துப்பூர்வமாக தங்கள் கருத்துக்களை தெரிவித்து உள்ளார்கள். |
| 2. | திரு.வி. சுரேஷ்,<br>துணைத் தலைவர்,<br>பசுமை விருட்சம் சேவா சங்கம்.<br>பதிவு எண். 23/2026<br>விழுப்புரம்- 605602. | |
| 3. | திரு.வி.மணிகண்டன்,<br>பொருளாளர்,<br>பசுமை விருட்சம் சேவா சங்கம்.<br>பதிவு எண். 23/2026<br>விழுப்புரம்- 605602. | |
| 4. | திரு.கே. சீனிவாசன்,<br>தலைவர்,<br>பசுமை விருட்சம் சேவா சங்கம்.<br>பதிவு எண். 23/2026<br>விழுப்புரம்- 605602. | |
| 5. | திரு. எம். சிவநாதன்,<br>செயலாளர்,<br>பசுமை விருட்சம் சேவா சங்கம்.<br>பதிவு எண். 23/2026<br>விழுப்புரம்- 605602. | |
| 6. | திருமதி. A. காமாட்சி,<br>எண். 64 அப்பாசாமி நகர்,<br>திண்டிவனம். 604001 | |
| 7. | திரு. பி. லோகேஷ்,<br>கீழ்அருங்குணம், கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 8. | திரு. பி. கபிலன்,<br>கீழ்அருங்குணம், கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 9. | திருமதி. கா. பச்சையம்மாள்,<br>கீழ்அருங்குணம், கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 10. | திருமதி.ப. லில்லி,<br>கீழ்அருங்குணம், கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |

| வ.எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 11. | திருமதி.வி.சுபா,<br>கீழ்அருங்குணம், கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | இவர்கள் இத்திட்டத்திற்கு எழுத்துப்பூர்வமாக தங்கள் கருத்துக்களை தெரிவித்து உள்ளார்கள். |
| 12. | திருமதி. பூ. நித்யா,<br>கீழ்அருங்குணம், கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 13. | திருமதி.இருசம்மாள்,<br>கீழ்அருங்குணம், கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 14. | திரு. கே.கருணாமூர்த்தி,<br>ஏந்தூர் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 15. | திரு. ப. வெங்கடேசன்,<br>திண்டிவனம். | |
| 16. | திரு. E. பிரவீன்,<br>ஏந்தூர் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 17. | திரு. வி. கோபாலகிருஷ்ணன்,<br>ராயநல்லூர் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 18. | திரு. விக்னேஷ்,<br>கீழ்அருங்குணம் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 19. | திரு.என். குமார்,<br>கீழ்பூதேரி கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 20. | திரு. ஜே. ஆர், பரந்தாமன்,,<br>கீழ்அருங்குணம் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 21. | திரு. சே. அசோக்,<br>ஏந்தூர் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 22. | திரு. A. சிவசங்கர்,<br>கீழ்பூதேரி கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 23. | திரு. கே. பிரபு,<br>கீழ்அருங்குணம், கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 24. | திரு. எம். மணிகண்டன்,<br>கீழ்அருங்குணம், கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 25. | திரு. G. சரத்குமார்,<br>ஏந்தூர் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |

| வ.எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 26. | திரு. வேல்முருகன்,<br>கீழ்அருங்குணம் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | இவர்கள் இத்திட்டத்திற்கு எழுத்துப்பூர்வமாக தங்கள் கருத்துக்களை தெரிவித்து உள்ளார்கள். |
| 27. | திரு. சண்முகம்,<br>அருங்குணம் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 28. | திரு. கு. சரத்,<br>திண்டிவனம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 29. | திரு. கே. அருண்,<br>கீழ்அருங்குணம் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 30. | திரு.மணி,<br>சேனலூர் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 31. | திரு.சதீஷ்,<br>கீழ்அருங்குணம் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 32. | திரு. பிரசாத்,<br>சேனலூர் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 33. | திரு. ஹரி,<br>கீழ்அருங்குணம் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 34. | திரு. ஆகாஷ்,<br>மானூர் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 35. | திரு. கர்ணாகரன்,<br>கீழ்அருங்குணம் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 36. | திரு.விஜய்,<br>கீழ்அருங்குணம் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 37. | திரு. ஆறுமுகம்,<br>கட்டளை கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 38. | திரு. P. பிரசாத்,<br>சேனலூர் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 39. | திரு. E. சுபாஷ்,<br>நல்லாளம் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 40. | திரு. பரமசிவம்,<br>விட்டலாபுரம் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |

**பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.**

மேலும் மேற்குறிப்பிட்ட செய்தித்தாளில் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பின்படி, இப்பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பின் நகலானது பொது மக்களின் பார்வைக்காக விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் - விழுப்புரம், ஒலக்கூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திண்டிவனம் தாலுகா அலுவலகம், கீழ்சேவூர் கிராம ஊராட்சி அலுவலகம், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் ஆகிய இடங்களில் வைக்கப்படும், மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளமான www.tnpcb.gov.in ல் வெளியிடப்படும். நடவடிக்கை குறிப்பின் மீதான கருத்துக்கள் ஏதேனும் இருந்தால், உறுப்பினர் செயலர், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் -தமிழ்நாடு / MoEF&CC, மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பிற அரசு அலுவலகங்களுக்கு நேரடியாக அனுப்பலாம் என்று மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் கூறினார்.

இறுதியாக, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி. அ), தேசிய நெடுஞ்சாலை, விழுப்புரம் அவர்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நிறைவடைந்ததாக அறிவித்தார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விழுப்புரம்.

தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி. அ)
தேசிய நெடுஞ்சாலை,
விழுப்புரம்.

**இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 24.07.2026).
2. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (10 பக்கங்கள் 76 நபர்கள்)
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் ஒலி மற்றும் ஒளிப்பட பெண்டிரைவ்.
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
5. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை (ஆங்கிலம்) மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
6. பொதுமக்கள் தன்னார்வ தொண்டு நிறுவனம் / சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடமிருந்து மின்னஞ்சல், அஞ்சல் மற்றும் பொது மக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 40 மனுக்கள்.